மாண்புமிகு திரு. செ. மாதவன் : விற்பனையைப் பொறுத்த அளவுக்கு 1969-70-லே 15.89 டன்னிலிருந்து, 1971-72-லே 124 டன்னாக உயர்ந்திருக்கிறது. மேலும் மேலும் எங்கெங்கே தேவையோ அங்கேயெல்லாம் அதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

மதுராந்தகம் பகுதியில் கயிறு தொழிற்சாலை

* 547 **வினா—திரு. சி. ஆறுமுகம் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதியில் கடலோரப் பகுதியில் தென்னை அதிக அளவில் பயிரிடப்படுவதால் அப்பகுதியைச் சேர்ந்த முகையூர் போன்ற இடங்களில் கயிறு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் இரண்டாவது கேரளாவாக விளங்குகின்ற எங்களுடைய செங்கற்பட்டு மாவட்டத்திலிருக்கும் மதுராந்தகம் பகுதி தென்னை, பனை மிகுதியாக இருக்கிற பகுதியாகும். அங்கு நார் தொழில் போன்ற தொழில்களை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதைக் கருத்திலே கொண்டுதான் சென்ற ஆண்டு ரூ. 10 லட்சம் அப்படித் தொழில்கள் தொடங்க வருகிறவர்களுக்கு தொழில் துறையிலிருந்து கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அதைப் பயன்படுத்திக்கொள்ள முயற்சி எடுக்கலாம்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அங்கே முதலீடு செய்வதற்கு வசதி வாய்ப்புகள் இல்லாமல் இருப்பதால், அந்தப் பகுதிக் கடலோரப் பகுதியாக இருப்பதால், அரசே முன்வந்து அதை நடத்துவதற்குத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த முதலீடுக்காகக் கடன் தருவதாக நான் சொன்னேன். கூட்டுறவுத் துறையிலே முயற்சித்தாலும் உதவி பெறலாம்.

திரு. சி. ஆறுமுகம் : அந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு எந்தவிதமான மூலதனமில்லாத பகுதியாகவும், மிகமிகப் பின்தங்கிய பகுதியாகவும் இருப்பதால், அரசே அங்கு தொழிலை நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1973 மார்ச் 28]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பங்குத் தொகை மிகக் குறைந்த அளவு சேர்த்துக் கொடுத்தாலே, கூட்டுறவுத் துறையிலே ஆரம்பித்து விடலாம்.

திரு. நா. காசிராமன் : மதுராந்தகம் பகுதியிலே மிகுந்த நார் கிடைக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு முன் ஒரு கேள்விக்குப் பதில் அளித்தபொழுது, ரப்பர் கலந்த மெத்தைகளைத் தயாரித்து இப்பொழுது அரசுடைமையாக்கப் பட்டுள்ள பஸ்களில் உபயோகப்படுத்தப்படுகிறது என்று சொன்னார்கள். அதற்குப் பதிலாக, அந்த நார் மெத்தைகளை உபயோகிக்கலாம். அதனால், பல லட்சக்கணக்கான ரூபாய்கள் மிச்சப்படும் என்பதை மனதில் கொண்டு, இந்த மாதிரி தொழிற்சாலையை மதுராந்தகம் பகுதியில் துவக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே இருக்கிற தொழிற்சாலையிலே இப்படிப்பட்ட பொருள்கள் இப்பொழுது உற்பத்தி செய்து தரப்படுகிறது. இன்னும் அதிகப் பொருள் தேவை யென்றால் பரிசீலனை செய்யலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த காயர் இண்டஸ்ட்ரி அமைப்பதற்கு அவர்கள் பங்கு கொடுத்தால், அதற்குக் கடன் கொடுக்க அரசு முன் வரும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தப் பங்கைக் கொடுப்பதற்குக் கூட வசதியில்லாதவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கிற காரணத்தினால், அரசு அங்கு தானே தொழிற்சாலை அமைக்க முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுத் தொழில் சங்கங்களிலே மிகக் குறைந்த பங்குத் தொகை போட்டால் போதும். அதை வைத்துக் கொண்டு, அரசாங்கம் ஷேர் காப்பிட்டல் போட்டு தொழிலை எடுத்து நடத்துவது எளிதாக இருக்கும். தென்னந்தோப்பு வைத்திருக்கின்றவர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி, நார் கொடுத்து உற்பத்தி செய்ய முன் வரவில்லை யென்பதால், தொழில் கூட்டுறவுமுறை தோற்று விடுகிறது. மூலக் கேள்வியே மதுராந்தகம் பகுதியில் கடலோரப் பகுதியில் தென்னை அதிக அளவில் பயிரிடப்படுவதால், அங்கு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா என்பது தான். நான் குறிப்பிட்ட அந்தச் சங்கடங்கள் இருக்கிற காரணத்தினால், விவசாயிகள் ஒன்றாகச் சேர்ந்து கூட்டுறவுத் துறையிலே நல்லமுறையிலே நடத்த முடியும்.